ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
අංක 1775/8 - 2012 සැප්තැම්බර් මස 11 වැනි අඟහරුවාදා - 2012.09.11
*1775/8 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 11/2009*

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*27 அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படுவதும் 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறானதுமான தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27 அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் -*

*(அ) இக்கட்டளைக்கான முதலாம் அட்டவணையில் நன்கு விவரிக்கப்பட்டதும், 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததும், உடுவெல என அழைக்கப்பட்டு அறியப்படுவதுமான காணி தொடர்பானதும், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 27 அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1985 ஏப்பிறல் 9 ஆந் திகதிய 344/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, அத்தகைய சபைக்குரித்தாக்கப்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் தொடர்பான அத்தகைய நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகாமையின் ஏதுக்களின் மீது, இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட உடுவெல என அழைக்கப்படும் காணிப் பரப்பளவு தொடர்பான சொல்லப்பட்ட கட்டளையின் அத்தகைய பாகத்தை இல்லாதொழிப்பதன்மூலம் இத்தால் திருத்துகின்றேன் ;*

*(ஆ) இல்லாதொழித்தலின் மேல், அத்தகைய காணிப்பரப்பளவு, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீள உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்றும் இத்தால் குறிப்பிடுகின்றேன்.*

***முதலாம் அட்டவணை***

*மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தாக்கப்பட்ட உடுவெல என அறியப்படும் காணியின் விவரணம்*

| அதிவிசேட வர்த்தமானி யின் இலக்க மும் திகதி யும் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கைமாற்றப்பட்ட காணிகளின் பரப்பளவு |
|---|---|---|---|---|
| 344/5 09.04.1985 | உடுவெல | கண்டி | பாத்தஹேவா ஹெற்ற | 735.79 ஹெக்டேயர்கள் |

***இரண்டாம் அட்டவணை***

ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்படும் காணியின் விவரணம்

| *குறிப்பிட்ட இல.* | *காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியின் பெரும் பாகத்திலிருந்து ஆணைக் குழுவிற்கு மீள உரித்தாக்கப்படும் காணியின் பரப்பளவு* |
|---|---|---|---|---|
| சீஓ/1083 | உடுவெல | கண்டி | பாத்தஹேவா ஹெற்ற | மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள பாத்தஹேவா ஹெற்ற பிரதேச செயலாளர் பிரிவில் உடுவெல, உடுகம கிராமத்தில் அமைந்துள்ளதும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். எம். எம். ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.01.22 ஆந் திகதிய 2553 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டின் எல்லைகள் வருமாறு:-<br>வடக்கு : நீரோடை மற்றும் கிராம வாசிகளுக்குரிய காணி,<br>கிழக்கு : கிராமவாசிகளுக்கு உரிய காணி, தோட்ட வீதி மற்றும் மகா/பிரிஎச்/2003/709 எனும் இலக்கத் துண்டு ஏ,<br>தெற்கு : நீரோடை,<br>மேற்கு : மாகாண சபை வீதி<br>என்பவற்றை எல்லைகளாகக் கொண்டமைந்துள்ள பதினைந்து தசம் ஐந்து இரண்டு ஒன்பது ஒன்பது ஹெக்டேயர்கள் (15.5299 ஹெக்டேயர்கள்) பரப்பளவைக் கொண்டுள்ளது. |

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2012, ஓகத்து 30.